## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 280/2017 | Date : 07.12.2023 | PW2 |
|---|---|---|
| Name:செல்வராஜ் | த/பெ. முனியப்ப கவுண்டர் | |
| Evidence Recorded Time: 04.31 P.M. to 04.50 P.M | | |

**4 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

தங்கப்பன் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். தங்கப்பன் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார். மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் என்றால் 10 1/2 ஏக்கர் நிலம் ஆகும். மேற்படி நிலத்தை யார் யார் பிரித்து கொண்டார்கள் என்றால் தங்கப்பன், முனுசாமி, நல்லதம்பி ஆகியோர்கள் பிரித்துக்கொண்டார்கள். பாகப்பிரிவினை எந்த வருடம் செய்து கொண்டார்கள் என்றால் 1986-ல் பிரித்து கொண்டார்கள். முனியகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 2006 ல் இறந்தார், தேதி, மாதம் தெரியாது. முனியகவுண்டர் இறக்கும் வரையில் நன்றாக இருந்தாரா என்றால் நன்றாக இருந்தார். முனியகவுண்டர் இறக்கும் வரையில் நிலத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். 19.12.2005-ல் முனியகவுண்டர் இறந்துவிட்டார் என்றாலும் நான் அதுபற்றி தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முனியகவுண்டர் எத்தனை ஏக்கர் பாகப்பிரிபினை கிடைத்தது என்றால் 2 ஏக்கர் கிடைத்தது. முனியகவுண்டர் இறந்த பிறகு அவருடைய நிலத்தை 5ம் பிரதிவாதி முனுசாமி ஓட்டி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். முனுயகவுண்டருடன் நல்ல பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது, அவர் உயிருடன் இருந்த காலகட்டத்தில் முனுசாமிக்கு உயில் எழுதி வைத்த விவரத்தை சொன்னாரா என்றால் என்னிடம் சொல்லவில்லை. 2005-ல் இறந்த பிறகு தங்கப்பன் மற்றும் நல்லதம்பி ஆகியோரிடம் சொத்தை பிரித்து தர கேட்டார்களா என்றால் அவர் இறந்த உடன் கேட்கவில்லை 2017-ம் ஆண்டு கேட்டார்கள். 2017-ம் ஆண்டு பாகம் பிரித்து தர கேட்கும் வரை முனுசாமிதான் நிலத்தை ஓட்டி வந்தார் என்றால் சரிதான். சின்னதம்பி மகன் குள்ளுசாமி அவர் மகன் ராமமூர்த்தி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும், பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். அவர்களிடமும் நல்ல பழக்க வழக்கம்

இருந்தது. 15.07.1999–ல் முனியகவுண்டர் 5ம் பிரதிவாதி முனுசாமிக்கு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றாலும், அதில் குள்ளுசாமி மற்றும் ராமமூர்த்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எந்த வருடம் பஞ்சாயத்து பேசினேன் என்றால் 2017–ம் ஆண்டு பேசினோம், தேதி, மாதம் தெரியாது. பஞ்சாயத்து பேசியபோது முனுசாமி நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு கூறிவிட்டார். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் என்னவாக இருந்தேன் என்றால் தாசாகப்பட்டி கிளை செயலாளராக இருந்தேன். தங்கப்பன் மேற்படி கட்சியில் என்னவாக இருந்தார் என்றால் அவர் நைனாவூரில் கிளை செயலாளராக இருந்தார். நாங்கள் இருவரும் ஒரே அரசியல் கட்சியில் இருப்பதால் தங்கப்பனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல தங்கப்பனுக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும், முனுசாமிக்கு மட்டுமே தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றாலும் சரியல்ல. நான் பாகப்பிரிவினை காலத்திலேயே சொத்தை மூன்றாக பாகம் பிரித்து கொள்ளுமாறு முனியகவுண்டர் சொன்னதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(அரசு தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்கள் விசாரணையாக பாவித்து கொள்ள வேண்டுமாய் கூறியதன் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.